## இராமநாதபுரம், தோட்டக்கலை துணை இயக்குநர் அவர்களது செயல்முறை ஆணைகள்:-
## முன்னிலை:திரு.அ. ஆறுமுகம்,பி.எஸ்ஸி(தோ.க).,

செ.மு.ஆ.எண்.பஅ1/5797/ 2023 நாள்: 21.03.2025

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - தொகுதி-4-இல் அடங்கிய பணிகள் - நேரடித்தேர்வு - இளநிலை உதவியாளர்(பி.அ) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, தோட்டக்கலை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தது - இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை-3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடித எண்.1919/PSD- D2/2023, நாள்: 02.09.2023 மற்றும் 16.11.2023.
2. சென்னை - 5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அநிபி5/92705/2023, நாள்: 16.11.2023.
3. சென்னை - 5, தோட்டக்கலை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்: அபபி2/24910/2023, நாள்: 14.12.2023.

<><><><><>

**ஆணை:**

பார்வை (1)-இல் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் 24.07.2022 அன்று நடத்தப்பட்ட தொகுதி-IV நேரடி தேர்வின் மூலம் தற்காலிகமாக தெரிந்தெடுக்கப்பட்டு (Selected Provisionally) பார்வை (2)-இல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் தோட்டக்கலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)-இல் காணும் செயல்முறை ஆணையின்படி, கீழ்க்குறிப்பிட்டுள்ள 2 இளநிலை உதவியாளர்களுக்கு ரூ.19500-71900 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில், நடைமுறையில் உள்ள இதர படிகளுடன் தற்காலிக அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் தனியர்களின் பணியினை கீழ்க்கண்ட நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதை கருத்தில் கொண்டு கீழ்க்கண்ட நிபந்தனையின் பேரில் ~~கொண்டு~~ இளநிலை உதவியாளர்(பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination-IV (Group-IV).

| வ. எண் | பெயர்/பதவி | தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய வரிசை எண் | முதன் முதலில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு. ரா. ஹரிஹரன், இளநிலை உதவியாளர் | 69 | 21.12.2023 முற்பகல் | 21.12.2023 முற்பகல் |
| 2. | திருமதி ஜீ. ரம்யா, இளநிலை உதவியாளர் | 89 | 28.12.2023 முற்பகல் | 28.12.2023 முற்பகல் |

மேற்காணும் இளநிலை உதவியாளர்கள்(பிணையமற்றது) தமது பணியில் முறையாக நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தை திருப்திகரமாக (Completion of two years on duty within a continuous period of three years) முடிக்க வேண்டும் எனவும் தகுதிகாண் பருவ காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட துறைத்தேர்வில் தேர்ச்சி மற்றும் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி நிறைவு பெற்ற பின்னரே, இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்படும் என்றும் அதன் பின்னரே, இளநிலை உதவியாளர் பதவியில் 2-வது மற்றும் தொடர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

21/3/25

தோட்டக்கலை துணை இயக்குநர்,
இராமநாதபுரம்.

21/3/25

பெறுநர்:
1. திரு. ரா. ஹரிஹரன், இளநிலை உதவியாளர் - இவ்வலுவலகம்.
2. திருமதி ஜீ.ரம்யா, இளநிலை உதவியாளர் - இவ்வலுவலகம்.

நகல்: வேளாண்மை இயக்குநர், சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை -5 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இருப்புக் கோப்பு (பணிக்குழு "பஅ1" - பிரிவு)

உபரி - 1.